# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ உரையின் சுருக்கம்**

**Friday Sermon Khulasa - 21 February 2014 (Tamil)**

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சாதனைகள்

**தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்.**

நேற்று பிப்ரவரி 20 ஆம் நாள் கழிந்தது. இந்த நாள் ஜமாஅத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின்முன்னறிவிப்பை சான்றாகக் கொண்டதன் அடிப்படையில் சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமக்கு ஒரு மகன் பிறப்பார் என்ற செய்தியை அறிவித்தார்கள். அவர் நல்லவராகவும், நற்பேறு பெற்றவராகவும் பல நற்பண்புகளைக் கொண்டவராகவும் திகழவிருந்தார். சென்ற ஜுமுஆவிலும் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளங்களை சான்றாகக் கொண்டு சில விஷயங்களைக் கூறியிருந்தேன். இன்றும் பிப்ரவரி 20-ஆம் தேதிக்கு நெருங்கிய ஜுமுஆவாகும். இந்த காரணத்தினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மகத்தான அடையாளமாகக் குறிப்பிட்ட ஒருமுன்னறிவிப்பைப் பற்றி எடுத்துக் கூறுவதை பொருத்தமானதாகக் கருதினேன். ஆட்சேபனை செய்பவர்களுக்கு பதிலடியாக அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஆட்சேபனை தெரிவிக்கிறீர்கள். ஆனால் இத்தகைய முன்னறிவிப்பு செய்வது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும் என்பதை தெளிவுபடுத்தினார்கள். மகன் பிறப்பார் என்று மட்டும் முன்னறிவிப்பு செய்யவில்லை. மாறாக அன்னார் (அலை) அவர்களின் வாழ்விலேயே பிறக்கவிருக்கின்ற, நீண்ட ஆயுளைப் பெறுகின்ற இன்னின்ன பண்புகளைக் கொண்டிருக்கின்ற மகன் பிறக்கவிருக்கிறார் என முன்னறிவிக்கப்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த முன்னறிவிப்பை ஆழமான, நீதியான கண்ணோட்டத்துடன் பார்த்தால் அது இறையடையாளமாக இருக்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. மேலும் அன்னார் (அலை), சந்தேகமிருந்தால் இப்படிப்பட்ட அடையாளத்தைக் கொண்ட ,இவ்விதமான முன்னறிவிப்பை எடுத்துக் காட்டுங்கள் என ஆட்சபணை தெரிவிப்பவர்களிடம் கூறினார்கள். மேலும், இந்த இடத்தில் கண்களைத் திறந்து பார்க்க வேண்டும். இது வெறும் முன்னறிவிப்பு மட்டுமல்ல; மாறாக இது வானத்தின் ஒரு மகத்தான அடையாளமாகும் எனக் கூறினார்கள். அன்னாரின் நோக்கமே இஸ்லாத்தின் உண்மையையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவத்தையும் அனைவருக்கும் நிரூபித்துக் காட்டுவதாக இருந்ததைப் போன்றே அவர்கள் இங்கும் இந்த முன்னறிவிப்பை எடுத்துரைத்து, 'இது எனது உண்மையை நிரூபிக்கின்றது எனக் கூறவிலை; மாறாக, கண்ணியமிக்க இறைவன் இந்த அடையாளத்தை நமது நபி கரீம், முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையையும், கண்ணியத்தையும் வெளிப்படுத்துவதற்காக காட்டியிருக்கிறான் எனக் கூறினார்கள். மேலும் உண்மையில் இந்த அடையாளம் இறந்த ஒருவரை உயிரூட்டுவதை விட நூறு மடங்கு மேலானதும், உயர்ந்ததும், முழுமையானதும், நிறைவானதுமாகும்' எனக் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எப்படி இருந்தபோதிலும் நாம் அறிந்திருப்பது போன்று இந்த முன்னறிவிப்புக் கிணங்க 1889 மார்ச் மாதம் அந்த வாக்களிக்கப்பட்ட மகன் பிறந்தார். அவர் இஸ்லாத்தின் மேன்மைக்காகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையையும் மகத்துவத்தையும் நிலைநாட்டுவதற்காகவும் எத்தகைய சாதனைகளை செய்தார்கள் என்றால் அவை உலகம் உள்ளளவும் நினைவில் கொள்ளப்படும். இவற்றை மற்றவர்களும் ஒப்புக்கொள்கின்றனர். இதன் பிறகு ஹுஸூர் அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி அவர்களைப் பற்றி 1886 பிப்ரவரி 20-ஆம் தேதிய அறிக்கையிலுள்ள ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி அவர்களைப் பற்றிய

அசல் வாசகத்தை படித்துக் காட்டினார்கள்.ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் சிறப்புகளை ஆழமாக சென்று பார்த்தால் - இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் வாழக்கையை ஆய்வு செய்து பார்த்தால் அவற்றிக்கு பல புத்தகங்கள் எழுத வேண்டிய தேவை இருக்கிறது. எந்தவொரு ஜுமுஆ உரையிலும் அல்லது எந்தவொரு சொற்பொழிவிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் வாழ்க்கை, சாதனைகளை நாம் முழுமையாக எடுத்துச் சொல்லி விட முடியாது.

எப்படி இருந்தபோதிலும் இன்றும் இந்த முன்னறிவிப்பை சான்றாக் கொண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுடைய வாழ்க்கையின் சில விஷயங்களை நான் எடுத்துரைப்பேன். அவற்றில் ஒரு முன்னறிவிப்பு பற்றிக் கூட முழுமையாக எடுத்துரைக்க முடியாது; மாறாக, முன்னறிவிப்பின் ஒரு பாதி பகுதியை எடுத்துக் கொண்டுவிளக்குவேன். மேலும் அன்னார் (ரலி) அவர்களின் அறிவும் இறைஞானமும் நம்மவர்களையும், அந்நியர்களையும் எவ்வாறு தாக்கத்திற்குள்ளாக்கியது என்பதையும் எடுத்துரைப்பேன். அதற்கு முன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் நூல்கள், உரைகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றைப் பற்றிய ஒரு பட்டியலை எடுத்து வைக்கிறேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் நூல்கள், உரைகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றின் தொகுப்பு 'அன்வாருல் உலூம்' (ஞானங்களின் ஒளிகள்) என்ற பெயரில் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன் நிறுவனம் வெளியிட்டுக் கொண்டிருகிறது. இதுவரை அன்வாருல் உலூம் 24 தொகுதிகளாக வெளிவந்து விட்டது. அவற்றில் உரைகள், சொற்பொழிவுகள், நூல்கள் என மொத்தம் 633 வெளி வந்துள்ளன. இவற்றில் 32 தொகுதிகள் வெளியிடப்படும் என ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன் நிறுவனம் கணிப்பு தெரிவித்துள்ளது. இவ்வாறு லெக்சர் ஆகியவை மொத்தம் ஏறக்குறைய 850 இருக்கும். அவ்வாறே ஜுமுஆ குத்பாக்கள், பெருநாள் குத்பாக்கள், நிகாஹ் குத்பாக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 2076 ஆகும். மேலும் இப்போது வரை குத்பாத்தே மஹ்மூது (மஹ்மூதின் குத்பாக்கள்) மொத்தம் 28 தொகுதிகள் வெளியிடப்பட்டு விட்டன.அவற்றில் 1602 குத்பாக்கள் அடங்கும். மேலும் 1948-ஆம் ஆண்டிலிருந்து 1959 வரையிலான குத்பாக்கள் 29 லிருந்து 39 தொகுதிகளில் வெளியிடப்படும். இவற்றிலும் ஏறக்குறைய 500 குத்பாக்கள் அடங்கும்.

ஆக, இவை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் ஞானம் சார்ந்த சாதனைகளின் ஒரு பொதுவான மேலோட்டமான விபரமாகும். மேலும் ஒவ்வொரு சொற்பொழிவையும், ஒவ்வொரு குத்பாவையும் கேளுங்கள். ஒவ்வொரு லெக்சரையும் பாருங்கள்.மனிதன் ஆச்சரியப்படும் அளவுக்கு அறிவு,ஞானம் எனும் முத்துக்கள் கோர்க்கப்பட்டுள்ளன; அறிவு எனும் நதி பெருக்கெடுத்து ஓடுகிறது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும் ஒருமுறை இந்த அம்சத்தை எடுத்துரைத்தார்கள். அப்போது அவர்கள், முன்னறிவிப்பின் ஓர் அம்சமாகிய 'அவர் அக, புற ஞானங்களால் நிரப்பப்படுவார்' என்பதை எடுத்துரைத்தவாறு, இதில் மட்டுமே எந்த அளவுக்கு பரந்த கருத்து இருக்கிறதென்றால், இதை எடுத்துக் கூறிக்கொண்டே சென்றாலும் முடிவுற முடியாது எனக் கூறினார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறும்போது, இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், திருக்குர்ஆன் விளக்கவுரை மட்டுமே 6 ஆயிரம் 8 ஆயிரம் பக்கங்கள் எழுதியிருப்பார்கள் என நான் கருதுகிறேன் எனக் குறிப்பிட்டார்கள். அவை 10 தொகுதிகளாகும். அவற்றில் சூரா ஃபாத்திஹா, சூரா பக்கரா ஆகிய முதல் இரு சூராக்கள், பிறகு சூரா யூனுஸ் 10-திலிருந்து சூரா அன்கபூத் 29 வரை பிறகு சுசூரா அந்நபா என்பதிலிருந்து சூரா அந்நாஸ் வரை ஆக மொத்தம் 59 சூராக்கள் இருக்கின்றன. அவற்றிற்கு அவர்கள் தஃப்ஸீர் எழுதியுள்ளார்கள். இந்த தஃப்ஸீர்கள் ஏறக்குறைய 6000பக்கங்களைக் கொண்டவையாகும்.மேலும் அவை சிறிய எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இன்றைய கணக்கின்படி எழுதுவதாக இருந்தால் அவை அநேகமக 10, 12 ஆயிரம் பக்கங்கள் ஆகிவிடும். எப்படி இருந்தாலும் இவை மீண்டும் அச்சாகின்றன.

பிறகு இஸ்லாமிய இலக்கியங்களில் அன்னாரின் 10 நூல்கள், பத்திரிகைகள் உள்ளன. ஆன்மீகம், இஸ்லாமிய நல்லொழுக்கங்கள், இஸ்லாமிய கொள்கைகள் குறித்த 31 நூல்கள்,

பத்திரிகைகளை அவர்கள் எழுதியுள்ளார்கள். வாழ்க்கை வரலாறு பற்றி 13 நூல்கள், பத்திரிகைகளை எழுதியுள்ளார்கள். வரலாறு பற்றி 4 நூல்களையும் பத்திரிகைகளையும் எழுதியுள்ளார்கள். ஃபிகா (மார்க்கச் சட்டம்) பற்றி 3 நூல்கள், பத்திரிகைகளை எழுதியுள்ளார்கள். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னுள்ள அரசியல் பற்றி 25 நூல்கள், பத்திரிகைகளையும், இந்தையா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னுள்ள அரசியல் பற்றியும், பாகிஸ்தான் உருவாகுவது பற்றியும் 9 நூல்கள், பத்திரிகைகளையும், காஷ்மீரின் அரசியல் பற்றி 15 நூல்கள், பத்திரிகளையும் பிறகு தஹ்ரீகே அஹ்மதிய்யத்தின் குறிப்பிட்ட பிரச்சனைகள் மற்றும் திட்டங்கள் பற்றி ஏறக்குறைய 100 நூல்கள், பத்திரிகைகளையும் எழுதியுள்ளார்கள். நான் முறிப்பிட்டுள்ள இந்த விபரங்கள் மட்டுமின்றி இன்னும் எண்ணற்ற கட்டுரைகள் உள்ளன. அவைநூற்றுக்கணக்கில் உள்ளன. அவை ஏறக்குறைய 800 பக்கங்களை விட அதிகமானவையாகும்.

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ‘அவர் அக, புற ஞானங்களால் நிரப்பப்படுவார்’ என முன்னறிவிப்பில் கூறப்பட்டதற்கிணங்க நாம் இவற்றை ஒரு பார்வையிட்டால் அவற்றில் அக ஞானமும் காணப்படுகின்றன; புற ஞானமும் காணப்படுகின்றன. மேலும் வியத்தகு விஷயம் என்னவெனில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எந்தவொரு நூல் அல்லது பத்திரிகை எழுதினாலும், இதை விட சிறந்த முறையில் எழுத முடியாது என்றே ஒவ்வொருவரும் கூறினர். அரசியலில் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றபோதும் அல்லது அவர்கள் அரசியலில் தலைமைப் பொறுப்பு பற்றிய ஆலோசனைகளைக் கூறியபோதும் மிகப் பெரிய எதிரியும் அன்னாரின் நிகரற்ற தகுதியை ஒப்புக்கொள்ளும் கட்டாயத்திற்குள்ளானார்.

அடுத்து ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீர்பற்றிய மற்றவர்களின் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.

அல்லாமா ஃபதஹ்பூரி சாஹிப் (இவர் அஹ்மதி இல்லை) ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு எழுதிய தனது கடிதத்தில் குறிப்பிடுகிறார்:

‘‘தஃப்ஸீரே கபீர் மூன்றாவது தொகுதி தற்போது எனது கையில் இருக்கிறது. நான் அதை மிக ஆழமான பார்வையுடன் பார்த்து வருகிறேன். திருக்குர்ஆனை படிப்பதற்கான ஒரு புதிய சிந்தனை முறையை தாங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அறிவுப்பூர்வமான, ஆதாரப்பூர்வமான சான்றும் மிக அழகிய முறையில் கோர்வையுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்த வகையில் இந்த தஃப்ஸீர் தனது தனித்தன்மையில் முற்றிலும் முதல் தஃப்ஸீர் ஆகும். தங்களின் ஆழிய ஞானம், பரந்த பார்வை, தங்களின் அசாதாரணமான சிந்தனை, அறிவுத்திறன், அழகிய முறையில் சான்றை எடுத்து வைக்கும் தங்களின் திறன் ஆகியவை ஒவ்வொரு சொல்லிலும் பகிரங்கமாக காணப்படுகிறது. நான் ஏன் இன்று வரை இது பற்றி அறியாதிருந்தேன்? என எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் அதன் எல்லா தொகுதிகளையும் படிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! சூரா ஹூது பற்றிய தஃப்ஸீரில் ஹஸ்ரத் ஹூது (அலை) அவர்கள் பற்றி தங்களின் சிந்தனைகளை அறிந்து எனது உள்ளம் பூரிப்படைந்து விட்டது. தாங்கள் ஹாவுலாயி பனாதீ (இதோ எனது மகள்கள் இருக்கின்றனர்) என்ற வசனத்திற்கு விளக்கவுரை எழுதும்போது, பிற குர்ஆன் விரிவுரையாளர்களை விட்டும் முற்றிலும் வேறுபட்ட தனித்த அம்சத்தை மேற்கொண்டிருப்பதைப் படித்து, இதற்கு பாராட்டு தெரிவிப்பது எனது சக்திக்கு உட்பட்டதல்ல என என்னையுமறியாமல் எழுதும் கட்டாயத்திற்குட்பட்டுவிட்டேன். அல்லாஹ் தங்களை நலமுடன் வைத்தருள்வானாக.’’

பாட்னா பல்கலைக்கழகத்தின் உருது துறையின் தலைவர் ஜனாப் அக்தர் **M.A** தஃப்ஸீர் கபீர் தொடர்பான தனது கண்கண்ட சாட்சியைக் கூறுகிறார்கள்:

‘‘ நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீரின் சில தொகுதிகளை பாட்னா பல்கலைக்கழகத்தின் ஃபார்ஸி துறையின் முன்னாள் தலைவரும், பாட்னா ஷபீனா கல்லூரியின் தற்போதைய முதல்வருமாகிய பேராசிரியர் அப்துல் மன்னான் சாஹிப் அவர்களுக்குக் கொடுத்தேன். அவர் அந்த தஃப்ஸீர்களைப் படித்து எந்த அளவுக்கு தாக்கத்திற்குள்ளானார் என்றால் அவர் ஷம்ஸுல் ஹுதா அரபி மத்ரஸாவின் ஆசிரியர்களுக்கும் அந்த தஃப்ஸீர்களைப் படிக்கக் கொடுத்தார். மேலும் ஒரு நாள் எல்லா ஆசிரியர்களையும் அழைத்து

அவர்களுடைய கருத்துக்களை கேட்டார். ஓர் அறிஞர் ஃபார்சி தஃப்சீர்களில் இந்த மாதிரியான தஃப்சீர் கிடைக்கவில்லை எனக் கூறினார்.அடுத்து பேராசிரியர் அப்துல் மன்னான் சாஹிப் அரபி தஃப்சீர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன எனக் கேட்டார். அறிஞர்கள் மௌனமாக இருந்தனர். கொஞ்ச நேரத்திற்கு பிறகு அவர்களில் ஒருவர் பாட்னாவில் எல்லா அரபி தஃப்சீர்களும் கிடைப்பதில்லை. எகிப்து மற்றும் சிரியாவின் எல்லா தஃப்சீர்களையும் படித்த பிறகே சரியான ஒரு கருத்தை கூற முடியும் என்றார். இதை கேட்ட பேராசிரியர் அப்துல் மன்னான் சாஹிப் பழங்கால அரபி தஃப்சீர்களை பற்றி எடுத்துரைத்தார். ஆனால் மிர்ஸா மஹ்மூதின் உயர் தரமான தஃப்சீரைப் போன்ற ஒரு தஃப்சீர் எங்கேயும் கிடைப்பதில்லை. நீங்கள் எகிப்திலிருந்தும் சிரியாவிலிருந்தும் புதிய தஃப்சீர்களை வரவித்து பார்த்து சில மாதங்களுக்கு பிறகு இதைப் பற்றி என்னிடம் பேசுங்கள் என்றார். இதைக் கேட்ட அரபி ஃபார்சி ஆலிம்கள் வாயடைத்து போயினர்.

செய்யது ஜாஃபர் ஹுசைன் சாஹிப் சித்கே ஜதீத் என்பவரின் பெயரில் எழுதிய தனது கடிதத்தில் குறிப்பிடுகின்றார்: நான் தஃப்சீர் கபீர் படித்து திருக் குர்ஆனைப் பற்றி முதல் முறையாக ஞானத்தைப் பெற்றேன். எல்லா இஸ்லாமிய ஆலிம்களும் எதிர்க்கின்ற ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் இணைவது ஒரு சாதாரண விஷயம் அல்ல. ஆனால் உண்மை தெளிவு பெற்ற பிறகு இங்கு மற்ற அபாயங்களைப் பற்றி பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆயினும் இரவு பகலாக சஜ்தாவில் விழுந்து,''அல்லாஹ்வே! எனக்கு நேரான பாதையை காட்டுவாயாக'' என துஆ செய்து கொண்டிருந்தேன். இந்நிலையிலேயே பல மாதங்கள் கழிந்தன. நான் சஜ்தா செய்த இடம் கண்ணீரால் நனைந்து விட்டது. மேலும் எனது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டன என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனெனில் அஹ்மதிய்யத்தை உண்மை எனக் கருதும் கொள்கையில் நான் உறுதியாகிவிட்டேன். மேலும் ஹஸ்ரத் மியான் வசீம் அஹ்மத் சாஹிப் அவர்களுக்கு ஒரு கடிதம் மூலமாக நான் பைஅத் செய்ய விரும்புகிறேன் என விண்ணப்பித்தேன்.

அவர் கூறுகிறார்: என்னுடைய பைஅத் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முன் கலீஃபா சாஹிப் அவர்கள்,'ஓர் அஹ்மதி ஆட்சிக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். இது ஒரு அஹ்மதி முஸ்லிமின் கடமை ஆகும் என குறிப்பிட்டு இருந்தார்கள். நான் பதில் கூறினேன்,'ஹுஸூர் அவர்களின் தஃப்சீர் இந்த எல்லா விஷயங்களையும் என் உள்ளத்தில் பதிய வைத்துவிட்டது. சில நாட்களுக்கு பிறகு எனது பைஅத் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது என காதியானிலிருந்து தெரிய வந்தது. அவர் கூறுகிறார்: முஸ்லிஹ் மவ்வூதாக இருப்பவர் கைதிகளை விடுவிக்கக்கூடியவராக இருப்பார் என நான் தஃப்சீரே கபீரில் படித்திருக்கிறேன். எனவே ஹுஸூர் அவர்களே தாங்கள் எனது விடுதலைக்காக துஆ செய்யுங்கள் என கூறினேன். ஹுஸூர் அவர்களும் அல்லாஹ் உங்களை விடுவிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக என துஆ செய்து அனுப்பினார்கள். இதற்கு சில நாட்களுக்கு பிறகே நான் விடுதலை ஆகிவிட்டேன். இந்த வகையில் 'அவர் கைதிகளை விடுவிக்க காரணமாக இருப்பார்' என்ற முன்னறிவிப்பிற்கு நான் உயிருள்ள சாட்சியாக இருக்கிறேன்.

அதற்கு பிறகு அமெரிக்கா, ஐரோப்பாவை சார்ந்த மேற்கத்திய சிந்தனையாளர்களின் கருத்தை எடுத்து வைக்கிறேன். பிரித்தானியாவின் சிறந்த சிந்தனையாளர் **A.J** ஆர்பரி என்பவர், இவர் அரபி ஃபார்சி இஸ்லாமிய இலக்கயத்தின் பேராசிரியர் ஆவார். அவர் கூறுகின்றார்,'திருக் குர்ஆனின் இந்த புது மொழியாக்கம் மற்றும் தஃப்சீர் ஒரு மிகப்பெரும் சாதனையாகும்.

சிரியாவை சார்ந்த டாக்டர் அஹ்மத் கூறுகிறார்: உண்மையையும் ஒளியையும் தேடியவாறு பல்வேறு ஆலிம்களின் நூல்களையும் தஃப்சீர்களையும் படித்தேன் அவற்றில் சுல்தானுல் ஆரிஃபீன் ஆகிய முஹியுத்தீன் இப்னு அரபி மற்றும் முஹம்மத் இப்னி அலியில் ஹாத்மித் தாயீ ஆகியோரின் தஃப்சீர்களும் அடங்கும். ஆயினும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மதின் தஃப்சீரில் கிடைத்த சிறப்பும் இன்பமும் வேறு எந்த தஃப்சீரிலும் கிடைக்கவில்லை.

பின்னர் மராகிஷைச் சேர்ந்த ஜமால் சாஹிப் எழுதுகிறார்: ''நான் இந்த விரிவுரையைப் படித்து அதை மற்ற விரிவுரைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது அது வானத்திற்கும் பூமிக்கும் இடையிலுள்ள வித்தியாசமாக இருந்தது. இது இறை ஞானங்களின், ஆழிய கருத்தின் விரிவுரையாக இருந்தது. மேலும் ஷரீஅத்தின் ரத்தினச் சுருக்கமாக இருந்தது. மற்ற விரிவுரைகளில் வெறும் தோல்

மட்டுமே இருந்தது.மேலும் இந்த விரிவுரையைப் படித்தது எனது உள்ளத்தில் இஸ்லாத்தைப் பற்றிய அழகிய படத்தை எடுத்து வைத்தது. அதுஆஅன்மாவரை இறங்கிக் கொண்டிருந்தது.''

ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சொற்பொழிவுகள் பற்றி மற்றவர்களின் தாக்கங்கள் தொடர்பாகக் கூறினார்கள்:

பஞ்சாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த் பஞ்சாப் லிட்ரேலி இயக்கம் பற்றி இரண்டு சொற்பொழிவுகள் ஆற்றுமாறு கேட்டுக் கொண்டதை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கேற்ப 31 மே 1934-ல் **Y.M.C.A** ஹாலில் ஹுஸூர் அவர்களின் முதல் சொற்பொழிவு 'உலக மொழிகளில் அரபி மொழியின் அந்தஸ்து என்ன?' என்ற தலைப்பில் ஆற்றினார்கள். இதனை இஸ்லாமிய கல்லூரியின் முதல்வர் ஜனாப் டாக்டர் பரக்கத் அலி சாஹிப் **P.hd** தலைமையேற்று நடத்தினார்கள். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு இரண்டரை மணி நேரம் தொடர்ந்தது. அதனை வந்திருந்தவர்கள் மிகவும் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் தலைவர் அவர்கள் நன்றி தெரிவித்த பிறகு வருகை தந்திருந்தவர்கள் அந்தசொற்பொழிவிலிருந்து நன்கு பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார்கள். மேலும் இப்படிப்பட்ட ஞானம் நிறைந்த பேச்சுகளை அடிக்கடி கேட்கும் நல்வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற விருப்பதையும் தெரிவித்தார்கள்.

ஜனாப் லாலா பீம் சீன் சாஹிபின் மகனாகிய லாலா கமர் சீன் காஷ்மீரின் முன்னாள் உயர் நீதிபதியாக இருந்தவர். அவரும் அங்கு இருந்தார்.ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சொற்பொழிவு மற்றும் தலைவரின் நன்றியுரைக்குப் பின் தனது நன்றியின் உணர்வையும் ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினார். அதில், இன்று அரபி மொழியின் சிறப்புகளைப் பற்றிய அருமையான கருத்துகளை உள்ளடக்கிய சொற்பொழிவைக் கேட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் கூறுகிறார்: நான் சொற்பொழிவைக் கேட்க வந்தபோது, பழைய மக்கள் சொல்வது போன்று உரை நிகழ்த்தப்படும் . மற்றவர்கள் பொதுவாக எப்படி கூறுவார்கள் என்பது பற்றி அவரே கூறுகிறார். ஒரு அரபியிடம் அரபு மொழியின் சிறப்பு பற்றி கேட்கப்பட்டது. அப்போது அவர், அரபு மொழிக்கு மூன்று காரணங்களினால் சிறப்பு இருக்கிறது என்றாராம். ஒன்று, நான் அரபியைச் சேர்ந்தவன்; இரண்டாவது இது திருக்குர்ஆனின் மொழியகும். மூன்றாவது சுவர்க்கத்தில் அரபி மொழி பேசப்படும். ஆக, இன்றும் அநேகமாக இதே மாதிரி அரபி மொழியின் சிறப்புகள் பற்றி பேசப்படும் என நினைத்தேன். ஆனால் ஆற்றப்பட்ட சொற்பொழிவு மிக அறிவுப்பூர்வமான, தத்துவ ரீதியான மகத்துவத்தை தன்னிடத்தில் கொண்டுள்ளது. நான் இந்த சொற்பொழிவின் ஒவ்வொரு சொல்லையும் முழு கவனத்துடன் கேட்டேன். மேலும் நான் இதிலிருந்து மிகவும் இன்பமடைந்தேன்; பலன் பெற்றேன். இந்த சொற்பொழிவின் தாக்கம் எனது உள்ளத்தில் நீண்ட காலம் நிலைத்திருக்கும் என நான் மிர்ஸா சாஹிபிடம் உறுதியுடன் கூறுகிறேன்.

பிறகு லாஹூரின் இஸ்லாமிய கல்லூரியின் துணை முதல்வர் ஸய்யிது அப்துல் காதிர் **M.A** இவர் வரலாற்று துறையின் தலைவரும் ஆவர். இஸ்லாமிய கல்லூரியில் இஸ்லாமும் கம்யூனிஸமும் என்ற தலைப்பில் 'லாஹூர் சன் ரைஸ்' என்ற பத்திரிகையில் ஒரு குறிப்பு எழுதினார். அதில் 'இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் கம்யூனிஸம் பற்றி மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சாஹிபின் சொற்பொழிவைக் கேட்கும் பெருமை எனக்கும் கிடைத்தது.அவர்களின் மற்ற சொற்பொழிவுகளைப் போன்று இந்த சொற்பொழிவும் அறிவுப்பூர்வமானதும், சிந்தனையை உயிரூட்டக் கூடியதும், ஞானங்கள் நிறைந்ததும் ஆகும். மிர்ஸா (பஷீருத்தீன்) சாஹிப் இறைவனால் ஞானம் வழங்கப்பட்டவராவார். எனவே அவருடய சிந்தனைகளை நாம் மதிப்புக் கண் கொண்டு பார்க்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

ஆக, இது அவர் 'அக, புற ஞானங்களால் நிரப்பப்படுவார்' என முன்னறிவிப்பில் கூறப்பட்ட ஓர் அம்சத்தின் காட்சியாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நமக்கு வழங்கிய ஞானத்தின் கருவூலங்களை படித்து பலன் பெறும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவனாக.

**Translation: O.M. Muzzammil Ahmad**